NMMS STUDY PLAN - 2022-23 - UNIT TEST - 2 (SAT)

Prepared by: NMMS MOHAN & SASIKALAMOHAN,
PUMS, ATHEMCHERI, RAMANATHAPURAM Dt.

## கணிதம்

## 1 - எண்ணியல் (VII-1) மற்றும் எண்கள் (VIII - 1)

51. பின்வருவனவற்றுள் எது முழுவைக் குறிக்காது?

1. 0 ÷ (-7)    2. 20 ÷ (-4)    3. (-9) ÷ 3    4. 12 ÷ 5

52. (-5) - (-7) ன் கூட்டல் தலைகீழி ______.

1. -2    2. 2    3. 0    4. 9

53. ஸ்ரீநகரின் தற்போதைய வெப்பநிலை $-1^0$C. 1 மணி நேரத்திற்குப் பின்னர் வெப்பநிலை $1^0$C அதிகரித்தால், வெப்பநிலை என்ன?

1. $-2^0$C    2. $2^0$C    3. $0^0$C    4. $1^0$C

54. (-2) × (-10) × 0 × 5 ன் மதிப்பு ______.

1. 100    2. -100    3. 1    4. 0

55. $\frac{1}{7}+\frac{2}{7}+\frac{?}{7}=1\frac{3}{7}$

1. 1    2. 2    3. 3    4. 7

56. எது திட்ட வடிவில் உள்ளது?

1. $\frac{-12}{26}$    2. $\frac{-49}{91}$    3. $\frac{-9}{16}$    4. $\frac{-4}{10}$

57. $\frac{1}{15} \div \left[\frac{4}{15}+\frac{1}{3}-\frac{3}{45}\right]$ ன் மதிப்பு ______.

1. $\frac{45}{4}$    2. $\frac{1}{8}$    3. $\frac{8}{3}$    4. $\frac{4}{45}$

58. எது சரியான கூற்று?

1. ஒரு விகிதமுறு எண் மற்றும் அதன் தலைகீழி ஆகியவற்றின் பெருக்கற்பலன் 0 ஆகும்.
2. m ன் தலைகீழி $\frac{1}{m}$, [ $m \neq 0$]
3. 0 ஒரு விகிதமுறு எண் அல்ல.
4. ஒரு விகிதமுறு எண் மற்றும் அதன் கூட்டல் நேர்மாறு ஆகியவற்றின் கூட்டல்பலன் 1 ஆகும்.

LIVEWORKSHEETS

59. இரு விகிதமுறு எண்களின் பெருக்கற்பலன் $\frac{-28}{81}$. அவற்றின் ஓர் எண் $\frac{14}{27}$.எனில், மற்றோர் எண் _______.

1. $\frac{2}{5}$ 2. $\frac{8}{17}$ 3. $\frac{-2}{3}$ 4. $\frac{-4}{3}$

60. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a) $x + y = y + x$ | - | i) பெருக்கல் நேர்மாறு |
| b) $x + 0 = x$ | - | ii) கூட்டல் நேர்மாறு |
| c) $y \times \frac{1}{y} = 1$ | - | iii) சேர்ப்புப் பண்பு |
| d) $x + [(-y) + z] = [x + (-y)] + z$ | - | iv) கூட்டல் சமனி |
| e) $z + (-z) = 0$ | - | v) கூட்டல் பரிமாற்றுப் பண்பு |

1. a - v b - i c - iv d - ii e - iii
2. a - iv b - i c - v d - ii e - iii
3. a - v b - iv c - i d - ii e - iii
4. a - v b - iv c - i d - iii e - ii

## அறிவியல்

### 3, 9 - நம்மைச் சுற்றியுள்ள பருப்பொருள்கள்

61. தற்கால அணுக்கொள்கையின்படி அணு எனப்படுவது _______.

(1) எந்த ஒரு தூய பொருளை இயற்பியல் அல்லது வேதியியல் முறையினால் மேலும் பிரிக்க இயலாதோ அப்பொருளே தனிமமாகும்.

(2) எந்த ஒரு தொடக்க நிலையிலுள்ள பருப்பொருள்களைச் சிறிய பொருளாக உடைக்க இயலாதோ அப்பொருளே தனிமமாகும்.

(3) ஒரே வகை அணுக்களால் ஆனதே தனிமமாகும்.

(4) வெவ்வேறு வகை அணுக்களால் ஆனதே தனிமமாகும்.

62. IUPAC ன் விரிவாக்கம் ______.

(1) Indian Union of Pure & Applied Chemistry

(2) Indian Unity of Pure & Applied Chemistry

(3) International Union of Pure & Applied Chemistry

(4) International Unity of Pure & Applied Chemistry

63. அண்டம் மற்றும் விண்மீன்களில் காணப்படும் மிக முக்கியமான தனிமங்கள்

LIVEWORKSHEETS

(1) O, H (2) H, N (3) H, He (4) O, C

64. அறை வெப்பநிலையில் நீர்மமாக காணப்படாதது எது?

(1) Hg (2) Br (3) Cs (4) அனைத்தும்

65. தனிம வரிசை அட்டவணையில் 118 வது தனிமமாக நவ 28, 2016ல் சேர்க்கப்பட்ட தனிமம் ______.

(1) Oganesson (2) Tennessine (3) Livermorium (4) Moscovium

66. கீழ்காண்பவற்றுள் எது உலோகப்போலி அல்ல?

(1) போரான் (2) நைட்ரஜன் (3) சிலிக்கான் (4) ஜெர்மேனியம்

67. அதிக உருகுநிலையைக் (3410 $^0$C) கொண்ட உலோகம் ______.

(1) இரும்பு (2) குரோமியம் (3) டங்ஸ்டன் (4) டெலூரியம்

68. சேர்மங்களுக்கு பெயரிடும் பொழுது நேர் அயனியின் பெயரை எவ்வாறு எழுத வேண்டும்?

(1) எம்மாற்றமுமின்றி முழுமையாக தனிமத்தின் பெயரை எழுத வேண்டும்.

(2) தனிமத்தின் பெயரின் முடிவில் 'ஐடு' என மாற்றி எழுத வேண்டும்.

(3) தனிமத்தின் பெயரின் முடிவில் 'ஏட்' என மாற்றி எழுத வேண்டும்.

(4) தனிமத்தின் பெயரின் முடிவில் 'இட்' என மாற்றி எழுத வேண்டும்.

69. (A): உயிரினங்களிலிருந்து பெறப்படும் சேர்மங்கள் கரிமச் சேர்மங்கள் என அழைக்கப்படுகின்றன.

(B): புவியிலிருந்து பெறப்படும் சேர்மங்கள் கனிமச் சேர்மங்கள் என அழைக்கப்படுகின்றன.

(1) A, B இரண்டும் தவறு (2) A, B இரண்டும் சரி

(3) A சரி B தவறு (4) A தவறு B சரி

70. பொருத்துக.

a) நீர் - i) சோடியம் குளோரைடு

b) சாதாரண உப்பு - ii) சோடியம் கார்பனேட்

c) சர்க்கரை - iii) ஹைட்ரஜன் ஆக்ஸைடு

LIVEWORKSHEETS

d) ரொட்டி சோடா - iv) சோடியம் பை கார்பனேட்

e) சலவை சோடா - v) சுக்ரோஸ்

(1) a-iii b-ii c-iv d-v e-i (2) a-iii b-I c-v d-iv e-ii

(3) a-iii b-iv c-ii d-v e-I (4) a-ii b-iii c-iv d-v e-i

71. பொருத்துக.

a) சலவைத் தூள் - i) கால்சியம் கார்பனேட்

b) சுட்ட சுண்ணாம்பு - ii) கால்சியம் ஹைட்ராக்ஸைடு

c) நீற்றிய சுண்ணாம்பு - iii) கால்சியம் ஆக்ஸைடு

d) சுண்ணாம்புக் கல் - iv) கால்சியம் ஆக்ஸி குளோரைடு

(1) a - iii b - ii c - iv d - i (2) a - iii b - i c - ii d - iv

(3) a - iii b - iv c - ii d - i (4) a - iv b - iii c - ii d - i

72. $H_2O$ ல் 2 என்பது எதைக் குறிக்கின்றது?

(1) ஹைட்ரஜன் மூலக்கூறுகளின் எண்ணிக்கை

(2) ஹைட்ரஜன் அணுக்களின் எண்ணிக்கை

(3) ஆக்ஸிஜன் மூலக்கூறுகளின் எண்ணிக்கை

(4) ஆக்ஸிஜன் அணுக்களின் எண்ணிக்கை

73. பின்வருவனவற்றுள் தவறான இணை எது?

(1) புரோமின் - புகைப்படத் தொழில்

(2) ஜெர்மேனியம் - குறைக்கடத்தி

(3) வனேடியம் - கம்பிச்சுருள்

(4) ரேடியம் - ஆபரணம்

74. குறியீட்டின் அடிப்படையில் பொருத்துக.

a) ஆர்கான் - i) Cr

b) ஆர்சனிக் - ii) Ba

LIVEWORKSHEETS

c) பேரியம் - iii) As

d) குரோமியம் - iv) Ar

(1) a - iii b - ii c - iv d - i (2) a - iii b - i c - ii d - iv

(3) a - iii b - iv c - ii d - i (4) a - iv b - iii c - ii d - i

75. ஊதா நிறத்தைக் குறிக்கும் வகையில் குறியீட்டைப் பெற்றுள்ள தனிமம் எது?

(1) Hg (2) I (3) Pu (4) Am

76 .பட்டாசுத் தொழிற்சாலைகளிலும், ராக்கெட் எரிபொருளைப் பற்ற வைக்க உதவும் உலோகப்போலி எது?

(1) Si (2) B (3) Ge (4) Po

77. கந்தக அமிலத்தின் அணுக்கட்டு எண் ______.

(1) 7 (2) 6 (3) 4 (4) 3

78. மென்மையான உலோகம் ______.

(1) வெள்ளி (2) தங்கம் (3) சோடியம் (4) இரும்பு

79. ஒரு மூலக்கூறு நீரில் ஆக்சிஜன் அணுவும் இரு ஹைட்ரஜன் அணுக்களும் ______ என்ற நிறை விகிதத்தில் இணைந்துள்ளன.

(1) 1 : 2 (2) 2 :1 (3) 8 : 1 (4) 1 : 8

80 .பொருத்துக.

a) மயில் துத்தம் - i) சல்பியூரிக் அமிலம்

b) பாரிஸ் சாந்து - ii) இரும்பு சல்பேட்

c) பச்சை துத்தம் - iii) தாமிர சல்பேட்

d) விட்ரியால் எண்ணெய் - iv) கால்சியம் சல்பேட் ஹெமி ஹைட்ரேட்

(1) a - iii b - i c - iv d - ii (2) a - iii b - iv c - ii d - i

(3) a - i b - ii c - iv d - iii (4) a - i b - iii c - ii d - iv

## சமூக அறிவியல்

### 1. பாறை மற்றும் மண்

81. பாறைகளைப் பற்றி படிக்கும் அறிவியல் படிப்பு ______

LIVEWORKSHEETS

(1) ஜியாலஜி (2) பெட்ராலஜி (3) எண்டமாலஜி (4) ஆர்னித்தாலஜி

82. புவியின் ஆழமானப் பகுதியில் காணப்படும் பாறைக் குழம்பு _______.

(1) மாக்மா (2) பசால்ட் (3) லாவா (4) ஜிப்சம்

83. உலகின் மிகப்பழமையான படிவுப்பாறைகள் _______ நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது.

(1) இத்தாலி (2) இந்தியா (3) கிரீன்லாந்து (4) ஜப்பான்

84. புவியின் மேற்பரப்பில் _______ வகையிலான கனிம வகைகள் உள்ளன.

(1) 2000 (2) 3000 (3) 2500 (4) 3500

85. புவியின் தோல் என அழைக்கப்படுவது _______.

(1) பாறை (2) மண் (3) கடல் (4) நீர்

86. _______ ஆம் நாள் உலக மண் நாளாக கொண்டாடப்படுகிறது

(1) டிசம்பர் 4 (2) அக்டோபர் 5 (3) அக்டோபர் 4 (4) டிசம்பர் 5

87. உலகளவில் மண் _______ வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன.

(1) 6 (2) 12 (3) 8 (4) 10

88. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) நெல் (2) கரும்பு (3) கோதுமை (4) தேயிலை

89. பொருத்துக.

a) பசால்ட் - i) அடியாழப் பாறைகள்

b) கிரானைட் - ii) வெளிப்புறத் தீப்பாறைகள்

c) ஜிப்சம் - iii) உயிரின படிவுப்பாறை

d) பட்டுக்கல் - iv) இரசாயன படிவுப்பாறை

(1) (a)-(ii) (b)-(i) (c)-(iv) (d)-(iii) (2) (a)-(i) (b)-(iii) (c)-(ii) (d)-(iv)

(3) (a)-(iii) (b)-(iv) (c)-(ii) (d)-(i) (4) (a)-(i) (b)-(ii) (c)-(iii) (d)-(iv)

90. பின்வருவனவற்றை வரிசைப்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

a) உருமாறியப் பாறைகள் b) தீப்பாறைகள் c) படிவுப்பாறைகள்

(1) (c) (b) (a) (2) (b) (a) (c) (3) (b) (c) (a) (4) (a) (b) (c)

LIVEWORKSHEETS

## 1. சமத்துவம்

91. சமத்துவம் என்பது சமமாக நடத்துவது மட்டுமல்ல, வெகுமதி அளிப்பதிலும் சமத்துவம் இருப்பதாகும் என்று கூறியவர் ______.

(1) A.V.டைசி (2) காந்திஜி (3) லாஸ்கி (4) பிளாட்டோ

92. சட்டத்தின் ஆட்சி என்ற கோட்பாட்டைக் கூறிய பிரிட்டிஷ் சட்ட வல்லுனர் ____

(1) A.V. ஸ்மி (2) உட்ஸ் (3) A.V. டைசி (4) A.V. டைலர்

93. இந்தியாவில் பொது தேர்தல்களில் எத்தனை வயது பூர்த்தி அடைந்தவர்கள் போட்டியிடலாம்?

(1) 19 (2) 18 (3) 17 (4) 25

94. பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் எத்தனை சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது?

(1) 35% (2) 45% (3) 40% (4) 50%

95. பாலின சமத்துவம் என்பது பெண்கள், ஆண்கள், சிறுவர், சிறுமியர் ஆகியோர் சமமான உரிமைகள், வாய்ப்புகள் பெற வேண்டும் என்று கூறுவதோடு அவர்கள் ஒன்று போல் நடத்தப்பட வேண்டும் என கூறும் நிறுவனம் ______.

(1) UNO (2) UNESCO (3) UNICEF (4) UNDP

96. பெண்கள் சம அந்தஸ்து பெற பணியாற்றியவர்கள் யாவர் ?

(i) ராஜா ராம் மோகன் ராய் (ii) ஈஸ்வர சந்திர வித்யாசாகர்

(iii) தயானந்த சரஸ்வதி (iv) மகாதேவ் கோவிந்த ரானடே

(1) i, ii, iii (2) ii, iii, iv (3) i, iii, iv (4) அனைவரும்

97. மக்களாட்சியில் தூண்களாக கருதப்படுவது ______.

(1) சமத்துவம் மற்றும் நீதி (2) சமத்துவம் மற்றும் சமயம்

(3) சமத்துவம் மற்றும் பாகுபாடு (4) சமத்துவம் & சண்டைகள்

98. தேர்தலில் போட்டியிடும் உரிமை ______.

(1) சமத்துவ உரிமை (2) சட்ட உரிமை

(3) சாதாரண உரிமை (4) அரசியல் உரிமை

LIVEWORKSHEETS

99. தவறான இணையைக் கண்டுபிடி.

(1) சட்டப்பிரிவு 15 - பாகுபாட்டை தடை செய்கிறது.

(2) சட்டப்பிரிவு 17 - தீண்டாமை ஒழிப்பு.

(3) சட்டப்பிரிவு 21 - பட்டங்களை தடை செய்கிறது.

(4) சட்டப்பிரிவு 14 - சட்டத்தின் முன் அனைவரும் சமம்.

100. 2017 ஆம் ஆண்டில் நிலையான மேம்பாட்டிற்கான பதினேழு குறிக்கோள்களில் ஐந்தாவது குறிக்கோளாக பாலின சமத்துவத்தைக் குறிப்பிட்டுள்ள நிறுவனம் ?

(1) ஐக்கிய நாடுகள் சபை (2) யூனிசெப்

(3) ஐக்கிய வங்கி (4) ஐக்கிய கழகம்


**Compiled by**

Mr.T.C.Pooventhan (Maths), PUMS, Godepalayam, Erode District.

Mr.NMMS.Mohan (Science), PUMS, Athemcheri, Ramanathapuram District.

Mrs.B.Usha Anandhi (Social Science), GHS, Keezhkumaramangalam, Cuddalore District.

**Corrections done by**

Mr.N.Chinannan (Maths), PUMS, K.Pallipatti, Salem District.

Live worksheet prepared by:

P.PRABATH, BT(Maths), PUMS, KOMALIYUR, SALEM Dt.


LIVEWORKSHEETS